சங்கீத வித்வான் S. V. சுப்பைய பாகவதர்,
S. G. கிட்டப்பா, K. B. சுந்தராம்பாள், பாடிவரும்

# குதம்பைசித்தர் பாடல், கிளிக்கண்ணி

இவையிரண்டு மடங்கியது.



23 JAN 1933
MADRAS

O-,1X
N32
172517

...முதலியார் வெளியிட்டது.

1932 [விலை அணா 1.

உ

கடவுள் துணை.

# கிளிக்கண்ணி.

---

## விநாயகர் துதி.

தூண்டின்பவீட்டுவழி சொல்லுங்கருணைபொழி
தூண்டி விநாயகனைத் தோத்தரித்தே—பாண்டிவள
நாட்டில்சிறந்த செந்தில் நாயகன்மேல் நூற்றிரெண்டு
தேட்டுங்கிளிக்கண்ணி செப்புவேன்.

## நூல்

ஆனை அழைத்தவனடி ஆறுமுகமானவண்டி
கோழிக்கொடியோனடி கிளியே 1
கொண்டுவரவேணுமடி

கைவளையல்விற்றவண்டி காட்டில்மரமானவண்டி
சுனையில்புகுந்தவண்டி கிளியே 2
சுந்தரமாய்நின்றவண்டி

ஐந்துகரனுக்கிளைய ஆறுமுகவேலவனைச்
செந்திற்குகந்தவனைக் கிளியே 3
சேரமனந்தேடுமடி

[illegible]டிக்குலாவிமெத்த குகனோடு வாழ்ந்ததெல்லாம்
வேடிக்கையல்லவடி கிளியே 4
வெகுநாளைத்தொந்தமடி

[illegible]லமயில்வாகனனால் நெஞ்சங்கரைந்த தன்னி
பாலுங்கசப்பாச்சுதடி கிளியே 5
பசலையும் பற்றுதடி

மாலைவடிவேலவர்க்கு வரிசையாய் நானெழுதும்
ஓலையுங்கிருக்காச்சுதடி கிளியே 6
என் உள்ளமுங்கிருக்காச்சுதே

ஊரார்வகைசொல்லவும் உற்றார்வகைசொல்லவும்
வாராதவார்த்தையெல்லாங் கிளியே 7
வந்துவந்து போகுதடி

ஐந்துவயதினிலே அறியாப்பருவத்திலே
பிஞ்சிலேகூடினேனடி கிளியே 8
பிரியமனங்கூடுதில்லை

வள்ளிக்குகந்தவனை மருவியிருந்தவிதங்
கள்ளப்புணர்ச்சியல்லவடி கிளியே
கற்புநிலையப்படியடி 9

அந்தந்தநாளையில் நானறியாமற்கூடிவிட்டேன்
இந்தவிதிவருமென்று கிளியே
எண்ணியறிந்தேனில்லை 10

எல்லார்க்குமொருவிதம் எனக்குமொருவிதமடி
வல்லவர்க்கும்வல்லவனாங் கிளியே
மால் மருகன்றந்தமையல் 11

எட்டாப்பழமடியோ யிரக்காததேனடியோ
மட்டில்லாவானந்தமே கிளியே
மால்மருகன்றந்தசுகம் 12

சுட்டும்பொருளுமற்றுச் சும்மாயிருக்கவைத்தான்
எட்டிரண்டு மறியேனடி கிளியே
ஏமாந்திருந்தேனடி 13

வள்ளிக்கணவன்பேரை வழிப்போக்கர்சொன்னாலும்
உள்ளங்குழையுதடி கிளியே
ஊனுமுருகுதடி 14

எட்டிஎட்டிப்பார்ப்பவர்க்கு எட்டவெட்ட நிற்குமது
கட்டுக்கடங்காதடி கிளியே
என்னை சுத்திரத்தின் பேருருவம் 15

கனல்மதாம்மொழி கட்டழக னென்குறவன்
என்னபொடிபோட்டானடி கிளியே
இணைபிரியக்கூடுதில்லை 16

அறிவென்றானம்பால் அறிவது தன்னையென்றான்
பிரிதொன்றுமில்லையென்றான் கிளியே
பேசாதிருந்தானடி 17

அலைந்து திரிபவர்க்கு ஆசையுண்டு தாபமுண்டு
கலந்து சுகிப்பவர்க்கு கிளியே
கண்ணீரும் வாராதடி 18

கானமயிலேறுமென்றன் கட்டழகன் றந்தவரும்
ஆனந்தமென்பதெல்லாம் கிளியே
அமுதாதவிப்பதடி 19

உண்டார்க்கிருக்கலைக்கும் உன்மனைக்குள்ளேயிருந்து
கண்டார்க்கிருவகைக்கும் கிளியே
உன் கட்டழகன் பேருருவம் 20

தாழ்வாரை கைநுக்கித் தன்மனைவிக்குள்ளேயிருந்து
வாழ்வாரைவாழ்த்துமடி கிளியே 21
மால்மருகன்றன் கருணை

எட்டும்வரைக்குந் துன்பம் எட்டிவிட்டார்பேரின்பம்
நட்டினுலும்போகாதடி கிளியே 22
தானுயறிந்தேனடி

மணந்தகுழலிருந்தோன் மற்றவழகிருந்தோன்
குணந்தான் குறியாயோ கிளியே 23
கோலமயில் வாகனர்க்கு

சொல்லாதசொல்லும் வருந்துறவும்வருந்தோட்டம்
கல்லாதகல்விவரும் கிளியே 24
என் கணவரைச்சேர்ந்தவர்க்கு

என்னோடுடன் பிறந்தார் எத்தனையோபேர்கள்பட்டார்
அத்தனைபேர்கள் பட்டுங் கிளியே 25
அவனுசைபோகுதில்லை

மாடுமனை போனுலென்ன மக்கள்சுற்றம் போனுலென்ன
கோடிசெம்பொன் போனுலென்ன கிளியே 26
குறுநகைபோதுமடி

முத்துநகைக்குமவன் போனவழிவார்த்தைகட்கும்
பித்துப்பிடித்தேனடி கிளியே 27
பேசுதற்கு கூசுதடி

ஆடுமயில்வாகனனுல் அன்றுமுதற் பட்டதுயர்
ஏடுமடங்காதடி கிளியே 28
எல்லாமெழுதவென்ருல்

என்னைகெடுத்தான்பின் என்னதானென்றுசொன்னுய்
தன்னையுங் கெடுத்துக்கொண்டான் கிளியே 29
சண்முகத்தின்மாயவித்தை

பாதியுள்ளபேர்களுக்குப் பயன்தரும் பொருளது
முத்திபெற்ற பேர்கட்கெல்லாம் கிளியே 30
மூடிவைக்கும் செம்பொன்னது

ஊனம்வருமென்றறியேன் உள்ளுக்குள்ளே கலந்தே
மானம்பறிபோச்சுதடி கிளியே 31
மற்றவர்க்கேச்சாச்சுதடி

அஞ்சியொடுக்கிநின்றேன் அழுது சலித்துநின்றேன்
பஞ்சபாடுபட்டேன் கிளியே 32
என் பாக்கியத்தைக் காணவென்று

கொஞ்சியிருப்பார்கள் குதலைமொழிமாதரெல்லாம்
அஞ்சியிருப்பேனடி கிளியே
என் குறையைச் சொல்வேனடி 33

மதியாதொருவார்த்தை வாயிருந்துவந்துவிடும்
எதிரொன்று சொல்லாதடி கிளியே
எந்தன் வண்டும் சொந்தமடி 34

சீவிசிணுக்கிடுவார் செந்தூரம் பொட்டிடுவார்
மேவியிருந்திடுவார் கிளியே
விகற்பமொன்று மில்லையடி 35

வைவேன்பிணங்கிடுவேன் மறுத்துவாவிடுவார்
பொய்மையொன்றுங்கூடாதபடி கிளியே
என் பொன்னின்வடி வேலவர்க்கு 36

பேசியிருக்கிறார்கள் பித்தமுதல் நோய்களுக்கு
ஆசைக்கொருமருந்தைக் கிளியே
அங்கெழுதி வைத்தாரில்லை 37

சரியாயெழுதிவந்தும் தக்கவடிவேலரென்னை
பிரியமாவெழுத்தெழுதக் கிளியே
பிரமன் மறந்தானடி 38

இரண்டென்றானப்பால் இரண்டுமொன்றுமென்றான்
ஒன்றென்றுமில்லையென கிளியே
உணர்வு தெரியவில்லை 39

தாரணியோர்கள் மெச்சத்தனியாகசெய்துவந்தேன்
சீரலைவாய்வந்ததனால் கிளியே
என் சீலையவாச்சுதடி 40

**கிளிக்கண்ணி முற்றிற்று.**

---

## ஒரு விண்ணப்பம்.

எமது ஷண்முகானந்த புத்தகசாலையில் 1 பாரம் ½-பாரம் கதை அம்மானை நாடகம், இன்னும் நூதனமான புஸ்தகங்களும் கிடைக்கும். வியாபாரிகளுக்கு விலை சரசமாய் கொடுக்கப்படும்.

ஷண்முகானந்த புத்தகசாலை,
பார்க் டவுன், மதராஸ்.

உ

சிவமயம்

# குதம்பை* சித்தர் பாடல்

வெட்டவெளி தன்னை மெய்யன்றிருப்பார்க்கு
பட்டய மேதுக்கடி குதம்பாய்
பட்டய மேதுக்கடி

மெய்ப்பொருள் கண்டு விளங்குமெய்ஞ்ஞானிக்குக்
கற்பங்களேதுக்கடி குதம்பாய்
கற்பங்களேதுக்கடி

காணாமற் கண்டு கருத்தோடிருப்பார்க்கு
வீணாசை மேதுக்கடி குதம்பாய்
வீணாசை யேதுக்கடி

வஞ்சகமற்று வழிதனைக் கண்டோர்க்கு
சஞ்சல மேதுக்கடி குதம்பாய்
சஞ்சல மேதுக்கடி

ஆதாரமான வடிமுடிகண்டோர்க்கு
வாதாட்ட மேதுக்கடி குதம்பாய்
வாதாட்ட மேதுக்கடி

நித்திரை கெட்டு நினைவோடிருப்பார்க்கு
முத்திரை யேதுக்கடி குதம்பாய்
முத்திரை யேதுக்கடி

சத்திரமான தலந்தனினிற்போர்க்கு
மந்திர மேதுக்கடி குதம்பாய்
மந்திர மேதுக்கடி

சத்தியமான தவத்திலிருப்போர்க்கு
உத்திய மேதுக்கடி குதம்பாய்
உத்திய மேதுக்கடி

---

* குதம்பை-ஆபரணம், குதம்பாய்-ஆபரணத்தையுடையவள்.

நாட்டத்தைப் பற்றி
வாட்டங்க ளேதுக்கடி
வாட்டங்க ளேதுக்கடி

முத்தமிழ்கற்று
சத்தங்க ளேதுக்கடி
சத்தங்க ளேதுக்கடி

உச்சிக்கு மேற்சென்
இச்சிப்பிங் கேதுக்கடி
இச்சிப்பிங் கேதுக்கடி

வேகாயல் வெந்து
மோகாந்த மேதுக்கடி
மோகாந்த மேதுக்கடி

சாகாமற்றாண்டி
ஏகாந்த மேதுக்கடி
ஏகாந்த மேதுக்கடி

அந்தரந்தன்னி
தந்திர மேதுக்கடி
தந்திர மேதுக்கடி

ஆனந்தம் பொங்கி
ஞானந்தா னேதுக்கடி
ஞானந்தா னேதுக்கடி

சித்திர கூட்டத்தை
பத்திர மேதுக்கடி
பத்திர மேதுக்கடி

முக்கோணந்தன்னில்
சட்க்கோணமேதுக்கடி
சட்க்கோணமேதுக்கடி

அட்டதிக்கெல்லா
நட்டணை யேதுக்கடி
நட்டணை யேதுக்கடி

நடுவணைசேர்வோர்க்கு
குதம்பாய்

விளங்குமெஞ்ஞானிக்குச்
குதம்பாய்

றுயர்வெளி கண்டோர்க்கு
குதம்பாய்

வெளியொளி கண்டோர்க்கு
குதம்பாய்

தனிவழி போவோர்க்கு
குதம்பாய்

லசைந்தாடு முத்தமர்க்கு
குதம்பாய்

யறிவோடிருப்பார்க்கு
குதம்பாய்

தினந்தினங் காண்போர்க்குப்
குதம்பாய்

மூலத்தமெஞ்ஞானிக்குச்
குதம்பாய்

மசைந்தாடுநாதர்க்கு
குதம்பாய்

---

கெ. எ. மதுரை முதலியாரவர்கள் பதிப்பித்த வடிவுடையம்மன் தாலாட்டு அவசியம் பார்க்கவும். விலை அணா 1.

முத்திபெற்றுள்ள முயங்குமெஞ்ஞானிக்குப்
பத்திய மேதுக்கடி குதம்பாய்
பத்திய மேதுக்கடி

அல்லலைநீக்கி யறிவோடிருப்பார்க்குப்
பல்லாக் கேதுக்கடி குதம்பாய்
பல்லாக் கேதுக்கடி

அட்டாங்கயோக மறிந்தமெஞ்ஞானிக்கு
முட்டாங்க மேதுக்கடி குதம்பாய்
முட்டாங்க மேதுக்கடி

வேகமடக்கி விளங்குமெஞ்ஞானிக்கு
யோகந்தா னேதுக்கடி குதம்பாய்
யோகந்தானேதுக்கடி

மாத்தாணைவென்று மலைமேலிருப்போர்க்கு
பூத்தான மேதுக்கடி குதம்பாய்
பூத்தான மேதுக்கடி

செத்தாரைப்போலத் திரியுமெஞ்ஞானிக்குக்
கைத்தாள மேதுக்கடி குதம்பாய்
கைத்தாள மேதுக்கடி

கண்டாரைநோக்கிக் கருத்தோடிருப்போர்க்குக்
கொண்டாட்ட மேதுக்கடி குதம்பாய்
கொண்டாட்ட மேதுக்கடி

காலனைவென்ற கருத்தறிவாளர்க்குக்
கோலங்க ளேதுக்கடி குதம்பாய்
கோலங்க ளேதுக்கடி

வெண்காயமுண்டு மிளகுண்டு சுக்குண்டு
உண்காய மேதுக்கடி குதம்பாய்
உண்காய மேதுக்கடி

மாங்காய்ப்பாலுண்டு மலைமேலிருப்போர்க்குத்
தேங்காய்ப்பாலேதுக்கடி குதம்பாய்
தேங்காய்ப்பாலேதுக்கடி

பட்டணஞ்சுற்றிப் பகலிற்றிரிவார்க்கு
முட்டாக்கு யேதுக்கடி குதம்பாய்
முட்டாக்கு யேதுக்கடி

தாவாரமில்லை தனக்கொருவீடில்லை
தேவார மேதுக்கடி குதம்பாய்
தேவார மேதுக்கடி

பின்னையறிந்து தலைவனை சேர்ந்தோர்க்கு
பின்னாசை யேதுக்கடி குதம்பாய்
பின்னாசை யேதுக்கடி

பத்தாவுந்தானும் பதியோடிருப்பார்க்கு
உத்தார மேதுக்கடி குதம்பாய்
உத்தார மேதுக்கடி

குதம்பைசித்தர் பாடல்

முற்றிற்று.

---


# ஆகாயப் புளுகன்

இது படிக்கப்படிக்க பழுத்த சிரிப்பையும், கனத்த கருத்தையும் கொடுக்கக்கூடியது. ஓயாமல் சிரித்துக்கொண்டிருக்க வேண்டுமானால் இக்கதையை வாங்கி வாசியுங்கள்.

இதன் விலை அணா 6.

ஷண்முகானந்த புஸ்தகசாலை, பார்க் டவுன், சென்னை.


மனோரஞ்சினி பிரஸ், சௌகார்பேட்டை, சென்னை.

வெளிவந்து விட்டது! வெளிவந்து விட்டது!!

காமநூல் தேவை தேவை என்று எழுதிக்கொண்டிருப்பவருக்கு உண்மையான 64-லீலா விநோதபடங்களுடன் கூடிய கொக்கோக நூல் வெளிவந்துவிட்டது. போலிப் புத்தகங்களைக்கண்டு ஏமாராமல் K. A. மதுரை முதலியார் பதிப்பித்ததாகப் பார்த்து வாங்கவும்.

# கொக்கோகம்



இதில் காம உற்பத்தி, காதலர்பெருமை, ஆண்பெண் ஜனனேந்திரியங்கள், பெண்கள் தேக அமைப்பு, அவைகளின் லட்சணங்கள், மாதவிடாய் மர்மம, அமிர்தநிலை படுக்கை அறை நுட்பங்கள், இன்பத்தின் லட்சியம், இன்பகாலத்தில் நிகழுவதென்ன? சம்போகத்திற்குத் தயாராகுதல், இன்பமனுபவிக்க வேண்டியநிலைமை, காமத்தால் ஏற்படும் தீமைகள், சம்போகம் செய்யவேண்டியக் கிரமம், எங்கும் காணுத சிற்றின்ப மர்மங்களும், சரசசல்லாப நுட்பங்களும், உண்மையாக இன்பத்தை அடையவேண்டிய மர்மங்களும், இதில் காணலாம். இதன் விலை ரூ 1 0 0

ஒவ்வொரு குடும்பத்திலும் இன்றிமையாத

ஆயுள்வேத சிகிச்சாரத்னமென்னும்

# குடும்ப வைத்தியம்

உலகிற் பிறந்த மக்கள் ஒவ்வொருவரும் நோயற்றவர்களாய்ச் சுகசரீரத்துடன் வாழவேண்டுமென்னும் எண்ணத்துடனேயே நம் முன்னோர்கள் திருவாய் மலர்ந்தருளிய வைத்திய சாஸ்திரங்கள் அனந்தமாகும். அவற்றையெல்லாம் ஒருவன் தன் வாழ்நாளில் வாசித்துணர்வதென்பது இயலாததன்றோ? ஆகவே, அக்குறையை அகற்றுவான்வேண்டி பல வைத்திய சாஸ்திரங்களை நனகு ஆராய்ந்தெடுத்துத் தொகுத்து வெளிவந்துள்ள இக் "குடும்ப வைத்தியம்" என்னும் புதிய நூலை வாசித்துணர்வோர் தங்கள் சரீரத்தைப் பாதுகார்த்துக்கொள்வதோடு, பிறர்க்கும் பயன்படத்தக்க சிகிச்சைகளைச் செய்யலாம். இதுபோன்ற வைத்திய நூல் இதுவரை வெளிவந்ததில்லை. இப்பொழுதுதான் புதிதாக வெளிவந்திருக்கிறது. இந்நூல் ஒன்று ஒவ்வொரு குடும்பத்திலும் இருக்குமானல், தக்க சமயத்தில் வைத்தியனைப்போல் உதவிபுரியத் தக்கதாகும். மேலும், இதிலுள்ள வாசகங்கள் தெளிவாக எழுதப்பட்டிருக்கின்றன. ரூ. 1—8—0.

ஷண்முகானந்த புத்தகசாலை, பார்க்டவுன், சென்னை,

மனோரஞ்சினி பிரஸ், சென்னை.